எம்.சி.ஓபி.எண் : 3649/2023 தேதி: 21/07/2025

மசா : 1

பெயர் : மணிவண்ணன்

த/பெயர் : கலிய பெருமாள்

வயது : 42

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மனுதாரர் தான் மேற்படி விபத்திற்கு காரணம் என்று காவல்நிலையத்தில் நான் புகார் அளித்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையிலும் இறுதி அறிக்கையில் எனது பெயரில் தான் தவறு என்று பதிவாகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையிலும் இறுதி அறிக்கையில் தவறாக பதிவாகியுள்ளது என்று அதை ரத்து செய்ய நான் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எக்மோர் நீதிமன்றதில் நடவடிக்கை எடுத்துள்ளேன். அதற்கான ஆவணம் இங்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எமசா ஆ1 ஆவணத்தின் படி முன்னால் சென்று வாகனத்தின் மீது பின்னால் சென்ற 1ம் எதிர்மனுதாரர் வாகனம் தான் மோதியதாக கண்டுள்ளது என்றால் அது தவறு. அதே போல் மனுதாரர் வாகனமானது தவறான பாதையில் வந்ததாக காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சாலை விதிகளை மீறி அதி வேகமாக சென்று நான் தான் முன்னால் சென்ற மனுதரார் வாகனதை இடித்து விபத்து ஏற்ப்படுதினேன் என்றால் சரியல்ல.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்திற்கு மனுதாரர் தான் முழுமையான காரணம் என்றால் சரிதான். அவர்களின் அஜகரதியாக ஒட்டியதாக காட்டக்கூடிய எனது காரில் பொறுத்தப்பட்ட டேஸ் கேமரா மூலம் வீடியோ பதிவுகள் இந்த நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.